**23.01.2025**

**C.C. No. 63/2024**

ம.சா. 2 சரவணன்

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. புகார்தாரர் எனக்கு என்ன முறை உறவு என்றால் என் தங்கை. நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் 9 ம் வகுப்பு படித்திருக்கிறேன். புகார்தாரர் எவ்வளவு தொகைக்கு இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் ரூ. 8 லட்சத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். எதிரிக்கு புகார்தாரர் எத்தனை முறை பணம் கொடுத்தார் என்றால் பணம் கொடுத்த விபரம் தெரியாது. நான் கடனுறுதிசீட்டை எப்போது எழுதினேன் என்றால் அவர் பணம் கொடுத்த விபரமும், காசோலை கொடுத்த விபரமும் எனக்கு தெரியாது. ஆனால் நான்தான் கடனுறுதிசீட்டை 2.10.2023 ல் பூர்த்தி செய்து கொடுத்தேன். புகார்தாரருக்கும் எதிரியின் கணவருக்கும் குடும்ப பிரச்சனை இருக்கும் விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. புகார்தாரரினால் எதிரிக்கும் எதிரியின் கணவருக்கும் பிரச்சனை இருந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

2) நான் எதிரியை பழிவாங்கும் நோக்கில் போலியான ஆவணங்களை தயார் செய்து என் தங்கைக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கடனுறுதிசீட்டை எங்கு வைத்து நிரப்பினேன் என்றால் என் தங்கை வீட்டில் வைத்து நிரப்பினேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's))
விரைவு நீதிபதி காரைக்குடி